[17th October 1964

ஆரம்ப சுகாதார நிலையம், கண்டமானடி

*14 கேள்வி.—திரு. மு. சண்முகம்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் விழுப்புரம் வட்டம் கோலியனூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த கண்டமானடி பஞ்சாயத்தில் பிரைமரி ஹெல்த் சென்ட்டர் ஒன்று ஏற்படுத்த அவ்வூர் பஞ்சாயத்து பொதுமக்களிடமிருந்து contribution ரூ. 10,000 அரசு கோரியதை கட்டி விட்டார்களா? எப்போது?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: A local contribution of Rs. 8,000 was collected and remitted into the Treasury during 1961.

திரு. மு. சண்முகம்: பஞ்சாயத்து பொது மக்கள் தொகை செலுத்தியிருந்தும், வேலை துவக்கப்படாததற்குக் காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: டி.எச்.ஓ. விடமிருந்து ரிப்போர்ட் வருவதற்கு சற்று காலதாமதம் ஆயிற்று. இப்பொழுது ரிப்போர்ட் வந்திருக்கிறது. அதை பரிசிலனை செய்துதான் ஏற்றுக் கொள்ள முடியும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: இந்த பிரைமரி ஹெல்த் சென்டருக்காக 1961-ல் பொது மக்களிடத்திலிருந்து பணம் பெற்று, 1962, ஜூலை மாதத்தில் அரசாங்கத்தால் உத்தரவிடப்பட்டு, அந்த உத்தரவு எனக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. 1962 ஜூலை மாதத்தில் முடிவு செய்யப்பட்ட பிரைமரி ஹெல்த் சென்டரை ஏன் இன்னும் திறக்கவில்லை? அதற்கான காரணங்கள் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: 1962-ல் முடிவு எடுத்த போதிலும், நேஷனல் எமர்ஜென்ஸி வந்ததன் காரணமாக, ஒத்தி வைக்கப்பட்டது.

திரு. ஜே. மாதா கவுடர்: இப்பொழுது நேஷனல் எமர்ஜென்ஸி தீர்ந்து விட்டதா? ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்களை இந்த ஆண்டு கட்டுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: குறிப்பிட்ட இடங்களில் எங்கே அவசியமிருக்கிறதோ, அந்த இடங்களில் கட்டுவதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்து எடுத்துக்கொள்ளப்படும்.

கிணறு, குளங்கள் வெட்டத்தடை

*15 கேள்வி.—திரு. சா. ராமசாமி: கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சி மாவட்டத்தில் நீர்ப்பாசனக் கால்வாய்களின் இரு புறங்களிலும் இரண்டு பர்லாங் தூரத்திற்குள் உள்ள சொந்த நிலச்சுவான்தார்கள் கிணறு, குளம் முதலியன வெட்டி தண்ணீர் எடுத்துக்கொள்ள தடை செய்யப்பட்டு உள்ளதா?